செய்திக் குறிப்பு dt: 23.02.2018

காரைக்கால் மாவட்டம் கீழகாசாக்குடி சனாதிக் குடியிருப்பில் புதிய அங்கன்வாடி கட்டிடத்தை நார்வே நாட்டைச் சேர்ந்த திரு. வெற்றி சின்னப்பன் என்பவர் அரசிடம் அனுமதி பெற்று ரூபாய் எட்டு லட்சம் செலவில் சுமார் மூன்று சதுரஅடிப்பரப்பில் கட்டி கொடுக்கப்பட்டு "இந்தியாவின் சகோதர, சகோதரிகளின் சேவையில் தொலை தூர மகன்" திரு. சின்னப்பன் அவர்கள் மாவட்ட ஆட்சியரிடம் இன்று முறைப்படி ஒப்படைத்தார்கள். அதைப் பெற்றுக் கொண்டு பேசிய மாவட்ட ஆட்சியர் திரு. R. கேசவன் இ.ஆ.ப. அவர்கள் திரு. சின்னப்பன் AVL என்னிடம் ஒரு மாதத்திற்கு முன்பு அனுமதி கேட்டு இந்த சேவை செய்துள்ளதற்கு என் நன்றி தெரிவிக்கிறேன். இங்கு குடியிருக்கும் சுமார் 65 குடும்பங்களில் வசிக்கும் பிள்ளைகளுக்கு இது படிப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும். இங்கு அங்கன்வாடி மூலமாக சத்துள்ள உணவுகள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு அடிப்படை கல்வியை - CDPO - மூலம் வழங்குவார்கள். உடன் நார்வே வாழ் மக்கள். மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை உதவி இயக்குநர் திருமதி. சத்யா மற்றும் ஊர் பஞ்சாயத்தார்கள் மற்றும் ஊர் பெரியவர்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர். பின்பு மரக்கன்றுகள் நடப்பட்டன

23/2/18